# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள்
## (திருத்தம்)

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்*
*2017, மே மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***179 ஆம் சட்டமூலம்*** ]


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2:*** *இவ்வாசகம் (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 28அ என்னும் புதிய பிரிவினை அறிமுகப்படுத்துவதன் மூலம் 1996ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் அப்புதிய பிரிவின் சட்டப்பயனானது மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது பொறிமுறையாக்கப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்படும் பக்குரு வலையினைப் பயன்படுத்துகின்ற மீன்பிடி தொழிற்பாடுகளைத் தடுப்பதற்கும் அத்துடன் அத்தகைய வலைகளை விற்பனை செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் மற்றும் ஏற்றி இறக்குவதற்கும் அத்துடன் அத்தகைய வளங்களின் பயன்பாடு தொடர்பாக உரிமத்தினை வழங்குவதற்குமாகும்.*

***வாசகம் 3:*** *இவ்வாசகம் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுவதற்கான தவறொன்றை ஆக்குகின்ற புதிய பிரிவினை சேர்ப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.*

***வாசகம் 4:*** *இவ்வாசகம் "பக்குருவலை" என்னும் சொற்றொடருக்கான வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது.*

***வாசகம் 5:*** *இவ்வாசகம் 28அ, என்னும் பிரிவின் ஏற்பாட்டின் உள்ளீட்டில் முரணாக இருக்கின்றதான எல்லாச் சட்டங்களையும் திருத்துகின்றது என்பதுடன் அத்தகைய சட்டங்கள் மீது 28அ என்னும் பிரிவினை மேலோங்கி நிற்கவும் செய்கின்றது.*

# கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)

ச.வ.ஒ. 21/2016.

## 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 28(அ) எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 28(அ) என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பக்குரு வலையை பயன்படுத்தி மேற்கொள்ளும் மீன்பிடிச் செயற்பாடுகளை தடைசெய்தல்.

28அ.(1)(அ) மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்படவேண்டிய இரண்டு சிறகுகளுமற்ற அல்லது அவ்வலைகளின் இரண்டு சுயாதீன முனைகளிலும் செங்குத்துக் கம்பங்களைப் பயன்படுத்தும் பக்குரு வலைகள் உட்பட அவ்வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிச் செயற்பாடுகளில் ஆளெவரும் ஈடுபடுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளை ஈடுபடுத்தல் செய்வித்தலோ ஆகாது.

(ஆ) இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடி செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளத்தினால் கட்டி

2-PL 005210 -475 (2017/02)

இழுக்கப்பட வேண்டிய ஏதேனும் பக்குரு வலையினை ஆளெவரும் பயன்படுத்துதலோ, சொந்தமாக வைத்திருத்தலோ, இறக்குமதி செய்தலோ, ஏற்றி இறக்குதலோ, கொள்வனவு செய்தலோ அல்லது விற்பனை செய்தலோ ஆகாது.

(2) இலங்கை நீர்ப்பரப்புக்களில் மோட்டார் மயப் படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளம் ஒன்றினால் கட்டி இழுக்கப்பட வேண்டிய பக்குரு வலையினால் நிறைவேற்றப்பட வேண்டிய மீன்பிடி செயற்பாடுகளுக்காக இச்சட் டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரிமம் எதுவும் வழங்கப் படலாகாது.

(3) இலங்கை நீர்ப்பரப்புக்களில் மோட்டார் மயப் படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்பட்ட பக்குரு வலைகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப் பட்ட மீன்பிடி செயற்பாடுகளுக்காக இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம் புதிப்பிக்கப் படுதலாகாது:

ஆயினும் பக்குரு வலைகளைப் பயன்படுத்து வதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று இன்னும் வலுவில் இருக்கின்றதுமான உரிமம் ஒன்று இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப் பினும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்கு உரிமமானது எந்த நோக்கத்திற்காகவும் எந்நோக்கம் தொடர்பிலும் வழங்கப்பட்டதோ அந் நோக்கத்திற்காகவும் அந்நோக்கம் தொடர்பிலும் செல்லுபடியானதாதல் வேண்டும்.”.

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவானது அதன் (2அ) என்னும் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

> "(2அஅ)இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கி ஒழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளித்ததன் மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை ஒன்றுக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.".

*4.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவானது "இலங்கை நீர்ப்பரப்புகள்" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

> " "பக்குரு வலை" என்பது கூம்பு வடிவ அமைப்பைக் கொண்டதும் மற்றைய முனையுடன் தொடுக்கப்பட்ட இரண்டு சிறகுகளுடன் அல்லது சிறகுகள் இன்றி உச்சியுடன் தொடுக்கப்பட்டவை அல்லது மடி முறை ஒன்றைக் கொண்டுள்ளதும் அத்துடன் மோட்டார் மயப்படுத்தப் பட்ட அல்லது இயந்திரமயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்படுவதுமான கட்டி இழுக்கும் வலை எனப் பொருள்படும்.".

**5.** இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பயன்கொண்டதாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் வேறு அத்தகைய சட்டத்திற்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், *இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவானது வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்.*

இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*